முருகப்பெருமான் துணை

**மகான் அர்ச்சுனர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.12.2023**, சனிக்கிழமை

1. தவபலமிக்க ஆறுமுக ஞானியே
தன்னார்வத் தொண்டு மிக்க
அவனியெங்கும் தொண்டர் படைகளளை
ஆக்கியே அற்புதம் படைக்க வந்த
2. வந்தநல் ஆறுமுக அரங்கனே
வள்ளலே உன் பெருமை கூறி
சிந்தைபட சோபகிருது தேள் திங்கள்
செப்பிட மூவையோர் திகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 16 ம் நாள், 02.12.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசியை
வழங்குவேன் அர்ச்சுனர் யானும்
பாரதமெங்கும் பலமிக்க ஞானவான்கள்
பண்போடு பெருக வேண்டி
4. வேண்டியே சுத்த நெறி முறை
விதைத்து ஆறுமுகனார் வழிபாட்டை
உண்டாக்கி சரவணசோதி ஏற்றி
உயிர்கள் மேல் தயவை காட்டும்
5. காட்டும் ஜீவ காருண்ய நெறி
கட்டளையாக யாவர்க்கும் தந்து
வாட்டமான பசிபிணி விரட்டும்
வள்ளல் தரும வழி வகை செய்து
6. செய்துமே தன் கொள்கையாக
சீடர்களாக சரணடைந்து வரும்
அய்யமற அனைவரும் ஏற்று
அவ்வாறு சேவைதனை செய்திட

7. செய்திட தீட்சை அருளி வழிகாட்டும்
சிறந்த ஞானியரின் பலம்
மெய்ஞானம் தருவதுடன் உலகோர்க்கு
முழுமையும் அழியாமையும் தந்தருளும்

8. அருள்மிக்க அரங்க மகானின்
ஆற்றலாக தொண்டர் படை
அருள்பெருக உலகெலாம் நிரம்ப
அறிவிப்பேன் கலியிடர்கள் விலகி

9. விலகி ஞானப் படைகளான
வேலவன் ஆசிபெற்றவர்கள் வழி
உலகமாற்றம் சடுதி காணும்
உண்மையான ஞானவான்கள் கொண்ட

10. கொண்ட ஞானத்தலைமை தானும்
குறைவிலா உருவாகி இனிதே
உண்டாகும் சடுதி ஞான ஆட்சி
உயர்வான அரங்கன் வழி காட்டும்

11. வழிகாட்டும் தொண்டர்படைக்கே
வருங்காலம் வாய்ப்பாக இருக்க
அழியாமை தரும் அரங்கன் வழி
அனைவரும் வர அற்புதம் நிகழும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–